RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22s46

# கரிசல் மண்ணில் கால்டுவெல்லின் கல்விப்பணி

ஜெ. இராஜ சொர்ணம் [அ, *]

[அ] தமிழ்த்துறை, சென்னைக் கிறித்தவக் கல்லூரி, சென்னை-600059, தமிழ்நாடு, இந்தியா.

# Caldwell's Educational Service on ‘Karisal Mann’ (Black Soil)

J. Raja Sornam [a, *]

[a] Department of Tamil, Madras Christian College, Chennai-600059, Tamil Nadu, India

* Corresponding Author: rajasornam@mcc.edu.in

Received: 11-03-2021
Revised: 24-04-2022
Accepted: 27-04-2022
Published: 07-07-2022

Check for updates

## ABSTRACT

The Gurukul system of education was only available in a few places in ancient India. Christian missionaries transformed this condition, establishing the current educational system and bringing education to all people, regardless of caste, creed, colour, or social rank. Robert Caldwell, in particular, made significant contribution in providing education to the poor in South India throughout the nineteenth century. In Idayangudi, Tirunelveli, he undertook various reformatory activities in the areas of gospel, Tamil language, society, medicine, and education. Robert Caldwell was born in Antrim, Ireland, in 1814. He went to Glasgow University to study. He was an expert in English, Tamil, and Religious Texts, as well as art. He was fluent in Tamil, English, Greek, Telugu, and Sanskrit, among other languages. In 1841, he went to Tirunelveli's Idayangudi in South India as a missionary under the London Missionary Society. He revitalised the boy's school which was begun by Rev. Iranius. In 1842, Caldwell also founded the Girl's School. These schools taught subjects like Tamil, English, Geography, and History. He founded Anglo Vernacular Schools to teach English and Tamil letters to youngsters who did not know English. He established schools in places like Tharuvai, Ramanathapuram, Samugarengapuram, Kulasegaran Pattinam, Azhvar Thirunagari, Tuticorin, Arumangalam, Thenthiruperai, and Thatanpadam. Caldwell stayed in Idayangudi for more than 50 years, bringing about significant changes for the illiterate. Caldwell's legacy lives on in the hearts of the people and has fused with the Chernozem soil, as evidenced by educational institutions and researchers who have benefited from them.

**Keywords:** Educational Service, Karisal Mann, Kulasegaran

## முன்னுரை

"திராவிட மொழிகளின் தந்தை", "திராவிட மொழிகளுக்குப் பெரும் கொடையளித்த பிதா மகன்" எனப் போற்றப்படுபவர் இராபர்ட் கால்டுவெல். இவர் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தென்னிந்தியாவில் பணிசெய்த மேலைநாட்டறிஞருள் குறிப்பிடத்தக்கவர். 1814-ஆம் ஆண்டு அயர்லாந்தில் உள்ள கிளாடிஸ் எனும் ஆற்றங்கரையில் அமைந்துள்ள அன்ட்ரிம் (Antrim) என்ற ஊரில் பிறந்தார். இவர் கிளாசுக்கோ (Glasgow) பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்றார். ஆங்கில இலக்கியங்கள், மொழியியல் நூல்கள், சமய நூல்கள் மற்றும் ஓவியக்கலையையும் முறையாகப் பயின்று அறிந்து கொண்டார். பேராசிரியர் டேனியல் ஸ்டான்போர்ட் என்பவரிடம் கிரேக்க மொழியையும் கற்று அறிந்தார். இவர் கரிசல் நிலமாகிய திருநெல்வேலியில் உள்ள இடையன்குடியில் இறைப்பணி, தமிழ்ப்பணி, சமூகப்பணி, மருத்துவப்பணி மற்றும் கல்விப்பணி என அனைத்துப் பணிகளையும் மிகுந்த ஆர்வமோடு செய்தவர். எனினும், இவர் கரிசல் மண்ணில் ஆற்றிய கல்விப்பணிக் குறித்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## இடையன்குடியில் கால்டுவெல்

கால்டுவெல், தென் தமிழ்நாட்டில் இறைப்பணியாற்ற இலண்டன் மிஷனரி சங்கத்தின் திருத்தொண்டராக இந்தியாவிற்கு அனுப்பப்பட்டார். மேரி ஆன் (Mary Ann) என்னும் கப்பலில் நான்கு மாதம் பயணம் செய்யும்போதே இந்தியாவைப் பற்றியும் தென்னாட்டு மக்களின் பழக்க வழக்கங்களையும் அறிந்து கொண்டார். 1838-ஆம் ஆண்டு ஜனவரி 8-ஆம் தேதி சென்னைக்கு வந்ததார். சி.பி. பிரௌன் என்பவரிடம் தெலுங்கு மற்றும் சமஸ்கிருத மொழிகளைக் கற்றறிந்தார். வில்லியம் ஓய்லஸ் துருவர் (Mr.W.H. Drew), இராமாநுசக் கவிராயரிடம் தமிழையும் கற்றறிந்தார். வின்சுலோ, போப், பவர், ஆன்டர்சன் முதலியவர்களை நண்பர்களாகப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. சென்னையில் மூன்று ஆண்டுக்காலப் பணிக்குப் பின் திருநெல்வேலியில் உள்ள இடையன்குடிக்கு 1841-ஆம் ஆண்டு வந்தடைந்தார் (Kamarasu, 2018). அக்காலத்தில் இடையன்குடி மக்கள் வறுமையிலும் ஏழ்மையிலும் காணப்பட்டனர்.

கரிசல் என்பது ஒரு வகை மண்ணின் பெயர். தமிழ்நாட்டில் குறிப்பாக கோவை, ஈரோடு, விருதுநகர், திருநெல்வேலி போன்ற மாவட்டங்களில் கரிசல் மண் பரவிக் காணப்படுகிறது. திருநெல்வேலி மாவட்டம் தென்கிழக்குப் பகுதியில் இடையன்குடி என்னும் சிற்றூர் அமைந்துள்ளது. இடையன்குடியின் பழைய பெயர் வல்லிடையன் குடியிருப்பு. இப்பெயரில் வல், இருப்பு என்ற சொற்கள் காலப்போக்கில் மறைந்து இடையன் குடியிருப்பு என மாறியிருக்கலாம். ஆதியில் முல்லை நில மக்களாகிய இடையர் மிகுதியாகக் குடியிருந்தமையால் இடையன்குடி எனப் பெயர் பெற்றது என்று இடையன்குடி ஊா் குறித்து குறிப்பிடுகிறார். கால்டுவெல் இடையன்குடியில் ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக வசித்து அருந்தொண்டாற்றி ஏழை மக்களுக்கு எழுத்தறிவித்தார் (Sethu Pillai, 1944). மேலும், இவா் தான் தென்னிந்தியாவில் வாழும் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளு போன்ற மொழிகள் பேசும் மக்கள் “திராவிடர்கள்” என வரலாற்று ஆவணங்களைக் கொண்டு உறுதிப்படுத்தியவா்.

## கல்லாமையை மாற்றிய கல்விப்பணி

பண்டைய இந்தியாவில் நாளந்தா, தட்சசீலம் போன்ற பல்கலைக்கழகங்களும், குரு-குல கல்வி முறையும் இருந்து வந்தது. அக்காலத்தில் கல்வியானது, குறிப்பிட்ட உயர் சாதியினருக்கும் உயர் குடியினருக்கும் மட்டுமே கிடைத்தது என்பதே வரலாற்றின் சான்று. ஆனால் அந்நிலை மாற்றி, தற்சமயம் இருந்து வரும் கல்வி முறையை இந்தியாவில் நிலைநாட்டி சாதி, சமயம், நிறம், சமுதாய நிலை ஆகியவற்றைக் கடந்து அனைவருக்கும் கல்வி என்ற நிலையை ஏற்படுத்தியவர்கள் கிறித்தவ அருட்தொண்டர்கள் ஆவர். இவர்களில், குறிப்பாக ஒடுக்கப்பட்ட மக்கள் கல்வியறிவு பெருவதற்கு பெரும்பங்காற்றியர் கால்டுவெல் எனலாம். இவர் கல்லாமை அறியாமைக்கு வழிவகுக்கிறது என்பதை மக்களுக்கு உணர்த்தி கல்வியறிவை மக்கள் பெற்றுக்கொள்ள பெரும் உந்துதலாயிருந்தார்.

மேலும், கல்லாமையைக் குறித்து கிரேக்க அறிஞர் பிளாட்டோவும், “கற்காமல் இருப்பதைவிட பிறக்காமல் இருப்பதே மேல், ஏனென்றால், கல்லாமை தான் தீவினையின் மூலவேர்” எனக் குறிப்பிடுகின்றார். கல்வி என்பது காலத்தால் அழியாதது. கல்வி மனிதனை காலந்தோறும் நெறிப்படுத்துகிறது என்பதை அறிந்த கால்டுவெல் கல்விப்பணியில் மிகுந்த ஆர்வத்தோடு செயல்பட்டார். திருவள்ளுவரும் கல்வி கற்றலைக் குறித்து, “தாம் இன்பமைடைவதற்குக் காரணமான கல்வியால் உலகம் இன்பமடைவதைக் கண்டு கற்றறிந்த அறிஞர் மென்மேலும் கல்வியையே விரும்புவர்” என்பதனை

“தாமின் புறுவ துலகின் புறக்கண்டு

காமுறுவர் கற்றறிந் தார்” (Gowmarishwari, 2002)

என்னும் திருக்குறளில் எடுத்துரைக்கின்றார் (Gowmarishwari, 2002). இக்கருத்திற்கிணங்க கால்டுவெல் மற்றும் அவருடைய மனைவி எலிசாவும் கல்வி பயிற்றுவித்தலை முக்கிய பணியாகக் கருதி அதைச் செய்தனர்.

## ஆண்கள் - பெண்கள் பள்ளி

அருள்திரு. இரேனியஸ் அவர்களால் 1821-ஆம் ஆண்டு இரேனியஸ் ஆரம்பித்த ஆண்கள் பள்ளிக்குக் கால்டுவெல் புத்துயிர் அளித்தார். ஆண்கள் பள்ளி தொடர்ந்து நடைபெற பெரும்பங்காற்றினார்.

கால்டுவெல் 1838-ஆம் ஆண்டு இடையன்குடிக்கு வந்த போது ஆறு பெண் பிள்ளைகள் மட்டுமே கல்வி கற்று வந்தனர். "மக்கள் கல்வி கற்றல் பெருந்தவறு" என்று கருதியிருந்த முதியோரைக் கால்டுவெல் ஐயர் வாரமொருமுறை தவறாதழைத்துக் கல்வியின் பெருமையை விரித்துரைத்தார். 1842-ல் பெண்கள் பள்ளியைத் தொடங்கினார். பெண் குழந்தைகள் பள்ளிக்கு வருவதற்குத் தயங்கிய பொழுது திண்பண்டங்கள் மற்றும் காசு கொடுத்து அவர்களைப் பள்ளிக்கு வரவழைத்தார். இப்பள்ளிக்கூடத்தில் தமிழ், ஆங்கிலம், புவியியல், வரலாறு ஆகிய பாடங்கள் கற்றுக் கொடுக்கப்பட்டன. இவ்வாறு கால்டுவெல் உருவாக்கிய பெண்கள் பள்ளிக்கூடம் இன்றும் திருநெல்வேலி பேராய அறக்கட்டளை அமைப்பில் தொடக்கப்ப பள்ளியாகச் செயல்பட்டு வருகிறது.

கால்டுவெல் துணைவியார் 1884-ல் தூத்துக்குடியில் உள்ள வடக்கூரில் ஒரு பெண்கள் பள்ளியைத் தொடங்கினார். இதே ஆண்டில் மேலூரிலும் கீழூரிலும் இரண்டு பள்ளிகளைத் தொடங்கினார். இப்பள்ளிகளில் ஜெனனா கல்விப் போதனையில் செயல்பட்டு வந்தன. அப்பள்ளிகளை தனிப் பள்ளிக்கூடங்களாக மாற்றத் திட்டமிட்டார். 1887-ல் இப்பள்ளிக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டது. கால்டுவெல் அப்பள்ளிக்கு விக்டோரியா மகாராணி மத்திய(நடுநிலைப்) பள்ளி என்னும் பெயரைச் சூட்டினார். இவ்வாறு "1888-ல் இடையன்குடி வட்டாரத்தில் இரண்டாயிரத்து நானூற்று இருபத்தைந்து பெண் பிள்ளைகள் கல்வி கற்று வந்தனர்" என்று கால்டுவெல் குறிப்பேடு தெரிவிக்கிறது (Samuel Jayakumar, 2017). அடுத்த ஐம்பது ஆண்டுகளில் கால்டுவெல் மற்றும் அவரது மனைவி திருமதி எலிசா அவர்களும் எடுத்த அயராத முயற்சியில் பெண்களும் கல்வி பெறுவது சாத்தியமானது

## உண்டுறை பள்ளி (Boardind School)

1844-ஆம் ஆண்டு கால்டுவெல்லின் துணைவி எலிசா அம்மையாரால் பெண்கள் உண்டுறைப் பள்ளி (Boarding School) தொடங்கப்பட்டது. "கல்வியை மக்கள் பெற்றால்தான் சமூகம் வளரும் என்பதனை உணர்ந்த கால்டுவெல், ஆண்கள் உண்டுறை பள்ளியையும் பெண்கள் உண்டுறை பள்ளியையும் இடையன்குடியில் நிறுவ எண்ணினார்" (Gnana Chandra Johnson,2019). உண்டுறை பள்ளியை நிறுவிய சில ஆண்டுகளில் மாணவியரின் எண்ணிக்கை அதிகரித்து. கால்டுவெல்லின் மகள்கள் இசபெல்லாவும் லூயிசாவும் உண்டுறைப் பள்ளிகளை நிர்வாகம் செய்வதில் பெற்றோருக்கு மிகவும் உதவியாக இருந்து செயல்பட்டனர். பிற்காலத்தில் ஆசிரியர்களின் தேவை அதிகமாக இருந்ததால் உண்டுறைப் பள்ளிகளில் ஆசிரியர் பயிற்சியும் தொடர்ந்து நடைபெற்று வந்தது.

தற்போது உண்டுறைப்பள்ளி திருநெல்வேலி பேராயத்தின் கீழ் நடுநிலைப்பள்ளியாகச் செயல்பட்டுவருகிறது. மேலும், இப்பள்ளியின் பழைய கட்டடங்கள் கால்டுவெல்லின் ஐந்தாம் வழிமரபிரரான ஹென்றி மற்றும் ஜூலியட் ஆகியோரின் உதவியால் புதுப்பொலிவு பெற்றன.

## ஆண் - பெண் பகல் பள்ளி

மேலை நாட்டுக் கலைச்சுவையில் ஆர்வமுடைய மாந்தர்க்கு ஆங்கிலவழிக் கல்வியும் தமிழ்மொழியில் ஆர்வமுள்ளவருக்கு தமிழ் வழிக்கல்வியும் சிறந்தது என கால்டுவெல் எண்ணினார். கால்டுவெல் ஆண்களும் பெண்களும் பயில்வதற்காக ஆண், பெண் பகல் பள்ளியை 1844-ஆம் ஆண்டில் தொடங்கினார். இப்பள்ளி உண்டுறையும் வசதியுடன் உயர்தரத் தொடக்கப் பள்ளியாகத் தொடங்கப்பட்டு, பின்னர் உயர்நிலைப் பள்ளியாக வளர்ச்சியடைந்தது. இப்பள்ளியானது தற்போது கால்டுவெல் நூற்றாண்டு நினைவு மேல்நிலைப் பள்ளியாகச் செயல்பட்டுவருகிறது. "1845-ல் பேராயர் ஸ்பென்சர்

இடையன்குடிக்கு வருகை தந்த போது கால்டுவெல்லின் மேற்பார்வையில் 14 பள்ளிகள் செயல்பட்டுவந்தன" எனக் குறிப்பிடுகிறார் (Gnana Chandra Johnson,2019).

## ஆங்கிலோ - வெர்னாக்குலர் பள்ளி

எண்ணும் எழுத்தும் அறியாதிருந்த சிறுவர் சிறுமியர்களுக் கல்வி கற்பிக்க ஆங்கிலோ வெர்னாக்குலர் என வழங்கப்பட்ட தாய்மொழிப் பள்ளிகளைத் தொடங்கினார். இப்பள்ளிகளில் ஆங்கிலமும் தமிழும் பயிற்றுவிக்கப்பட்டது. வெர்னாக்குலர் பள்ளிகளை தருவை, இராதாபுரம், சமூகரெங்கபுரம், குலசேகரன் பட்டினம், ஆழ்வார் திருநகரி, தூத்துக்குடி, ஆறுமங்கலம், தென்திருப்பேரை, தட்டான்மடம் என்னும் ஒன்பது கிராமங்களில் நிறுவினார். பள்ளிகளை மேற்பார்வை செய்வதற்காக பள்ளி ஆய்வாளர்களையும் நியமித்தார். கால்டுவெல் 1876-இல் இடையன்குடியில் பாலர் பள்ளியைத் தொடங்கினார். பெற்றோர் இல்லாத ஏழைக் குழந்தைகளுக்கு விடுதிகள் ஏற்படுத்தி, அதில் தங்க வைத்து கல்வி பெற உதவி செய்தார்.

## கால்டுவெல் கல்லூரி

இடையன்குடியில் கல்வி கற்ற மாணவ மாணவியர் உயர்கல்விக்கு சாயர்புரத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இப்பள்ளியானது 1844-ஆம் ஆண்டு ஜி.யு. போப் போதகரால் "சாயர்புரம் மிஷனரி" என்ற பெயரில் தொடங்கப்பட்டது. 1880-ஆம் ஆண்டு கல்லூரியாக விரிவடைந்தது. இக்கல்லூரி கால்டுவெல்லின் முயற்சியினால் 1883-ல் தூத்துக்குடிக்கு மாற்றப்பட்டதால் "கால்டுவெல் கல்லூரி" என்னும் பெயருடன் செயல்படத் தொடங்கியது. இக்கல்லூரியில் மாணவர்கள் இளங்கலைப் பட்டம் படிப்பதற்கு சென்னைப் பல்கலைக்கழகம் அனுமதி அளித்தது. மாணவர்களும் F.A(Fine Arts) மற்றும் B.A தேர்வுகளில் நன்முறையில் தேர்ச்சி அடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கால்டுவெல் செய்த சேவையைப் பாராட்டி இவருக்கு பெருமை சேர்க்கும் வகையில் 1967-ம் ஆண்டு இரண்டாவது உலகத்தமிழ் மாநாட்டில் சென்னை கடற்கரையில் கால்டுவெலுக்கு திரு உருவச்சிலை தமிழக அரசால் நிறுவப்பட்டது. அவர் வசித்த இடையன்குடி இல்லம் அரசு நினைவிடமாக வைக்கப்பட்டுள்ளது.

## முடிவுரை

கல்வி கற்றோருக்கு "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற சமூக உறவை ஏற்படுத்தியவர் கால்டுவெல். இவரது கல்விப்பணியில் ஆண்கள் பள்ளி, பெண்கள் பள்ளி, உண்டுறைப் பள்ளி, ஆண்-பெண் பகல் பள்ளி, ஆங்கிலோ வெர்னாக்குலர் பள்ளி, கால்டுவெல் கல்லூரி ஆகியவை இடையன்குடியின் முன்னேற்றப் படிகற்களாகும். இவ்வாறாக, கரிசல் மண் கலந்த அநேக கிராமங்களில் கல்விமணம் கமழச் செய்த கால்டுவெல் இன்றும் மக்கள் மனதில் நீங்கா இடம் பிடித்திருப்பதை அவர் தோற்றுவித்த கல்வி நிறுவனங்களும் அதன்பால் பயன்பெற்ற கல்வியறிஞர்களுமே சாட்சி.

## References

Gnana Chandra Johnson, Y., (2019) Robert Caldwell arulpaniyalar, Moriah Ministries, Chennai, India.

Gowmarishwari, S., (2004) Thirukkural, Saradha Pathippagam, Chennai, India.

Kamarasu, R., (2018) Caldwellin Tamilkodai, Sahitya Akademi, New Delhi, India.

Samuel Jayakumar, (2017) Varalatril chirusthuvam, Mission educational book, Chennai, India.

Sethu Pillai, R, B., (1944) Caldwell Iyer Saritham, International Printing Press, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License